**100% வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 49** **நாள்: 15.04.2024**

**நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல்-2024னை முன்னிட்டு, தேர்தலில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் காமராஜர் காலனி சென்னை நடுநிலைப் பள்ளி விளையாட்டுத் திடலிலிருந்து நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வுப் பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல்-2024னை முன்னிட்டு, தேர்தலில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் இன்று (15.04.2024) கோடம்பாக்கம் மண்டல அலுவலகம் அருகில், காமராஜர் காலனி சென்னை நடுநிலைப் பள்ளி விளையாட்டுத் திடலிலிருந்து நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வுப் பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் தலைமையில் அனைவரும் வாக்காளர் உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வருகின்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 19.04.2024 அன்று நடைபெறவுள்ளது. தேர்தலுக்கு இன்னும் 3 நாட்களே உள்ள நிலையில் தேர்தல் பணிகள் அனைத்தும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, வாக்காளர்களுக்கு தேர்தலில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து பல்வேறு வகைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் முதலில் 18 வகையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இது படிப்படியாக 33 என விரிவுபடுத்தப்பட்டு, தற்பொழுது 45 வகையான தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இன்று நடைபெறும் இந்த விழிப்புணர்வுப் பேரணியானது ஹெல்மெட் அணிந்து 250 வாகனங்களில் செல்லும் இவர்கள் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு மோட்டார் சைக்கிள் மூலம் வாக்குப்பதிவு குறைவான இடங்களுக்குச் சென்று, அசோக் நகர், அண்ணா பிரதான சாலை, முனுசாமி சாலை, ராஜமன்னா சாலை, பி.டி.ராஜன் சாலை வழியாக சிவன் பூங்காவில் சென்றடைகிறது. இதுமட்டுமில்லாமல் இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் V.J. மற்றும் D.J. மூலமாக பொழுதுபோக்கு நிகழ்ச்சி நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், கடலுக்குள் சென்றும் ஒருவர் வாக்குப்பதிவின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார். இப்படி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

காவல் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தபால் வாக்குகள் செலுத்துவதற்கு நேற்றும், இன்றும் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தபால் வாக்குகளில் விட்டுப்போன அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 16 பயிற்சி மையங்களிலும் தபால் வாக்குகள் செலுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் 39.20 இலட்சம் வாக்காளர்களின் இதுவரை 33.51 இலட்சம் வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், வாக்குப்பதிவிற்குத் தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், VVPAT இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள் உள்ளிட்ட அனைத்து உபகரணங்களும் தயார்நிலையில் உள்ளது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் எந்தெந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு செல்ல வேண்டும் என்ற விவரம் தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் தெரிவிக்கப்படும். சென்னை மாவட்டத்தில் உள்ள 3726 வாக்குச்சாவடி மையங்களை கண்காணிக்க 299 செக்டார் மேஜிஸ்ரேட் (Sector Magistrate) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் காவல்துறையினருடன் இணைந்து பாதுகாப்பு அறைகளிலிருந்து வாக்குச்சாவடி மையங்களுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் வரைபடம் மூலமாக கொண்டு வந்து சேர்த்து, வாக்குப்பதிவு முடிந்தவுடன் உபகரணங்களை பாதுகாப்பாக எடுத்துச் சென்று, வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள பாதுகாப்பு அறைகளில் சேர்ப்பார்கள். வாக்குப்பதிவு முடிந்தவுடன் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், பயன்படுத்தும் போது பழுதடைந்த இயந்திரங்கள், பயன்படுத்தப்படாத இயந்திரங்கள் என தனியாக 3 பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டிருக்கும்.

நிலைக்கண்காணிப்பு குழுக்கள் மற்றும் பறக்கும் படைக் குழுக்கள் மூலமாக ரூ.15.77 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தேர்தல் நடத்தும் அலுவலர்/மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜெ. பிரவீன் குமார், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.முருகேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**